பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 14 செவ்வாய்க்கிழமை 26.04.2022 கதிர் 66

## விமல் வீரவன்ஸவை பிரதமராக்க முயற்சி



இடைக்கால அரசில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவைப் பிரதமராக்க அரசிலிருந்து வெளியேறிய சுயாதீன எம்.பிக்கள் குழு முயற்சி எடுத்துள்ளது என எதிர்க் கட்சியைச் சேர்ந்த ☞ 2

# ‘விடுதலைக்கான போராட்டம்’ நடைபவனி கண்டியில் ஆரம்பம்







பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும் அரசுக்கு எதிரான எதிர்ப்பு பேரணி இன்று முற்பகல் கண்டி நகரத்தில் தொடங்கியது. ‘விடுதலைக்கான போராட்டம்’ என்ற இந்த நடைபவனி கண்டி பொது சந்தை பகுதியில் இருந்து ஆரம்பித்து மாவனல்ல திசையை நோக்கி நகர்ந்தது. பல்லாயிரக் கணக்கான கட்சித் தொண்டர்களும் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களும் இந்த நடை பவனியில் பங்கு பெறுகின்றனர். இந்த நடை பவனி மே முதலாம் ☞ 2

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு

## ஜே.வி.பி. பேராதரவு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப் படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதற்கு ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும், இடைக்கால அரசு தொடர்பில்ஜே.வி.பியின்நிலைப்பாட்டை அவர் அறிவிக்கவில்லை.

## மின்சாரக் கட்டணமும் 100 வீதத்தால் உயர்வு

மக்களுக்கு அடிக்கு மேல் அடி

**நாட்டில் தொடர் விலையேற்றத்தால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மின்சாரக் கட்டணமும் 100 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.**

**இதற்குப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.** ☞ 2



## விக்கியும் முழு ஆதரவு



அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முழுமையான ஆதரவு வழங்கவுள்ளார் எனதமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவித்தார்.

அத்துடன் 20ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு ஆதரவை வழங்குகின்ற போதிலும் ☞ 2



## தந்தை செல்வா நினைவு தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஏப்.26

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 45 ஆவது நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

இன்று காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில், ஓய்வு நிலை ஆயரும் தந்தை செல்வா நினைவு ☞ 2

## பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த கட்டாயம் விலகியே தீரவேண்டும்

அரசுக்கு எதிரான பிரேரணைக்கு சு.க. ஆதரவு என்கிறார் மைத்திரி



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கட்டாயம் பதவி விலக வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதற்கும் இந்தக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## ‘மொட்டு’டன் இணைந்து ஆட்சியமைக்கமாட்டோம்

எதிர்க்கட்சித் தலைவர் திட்டவட்டம்



மொட்டுடன் ஆட்சி அமைத்துக் கொள்ளையர்களைப் பிடிக்க முடியாது எனவும், அவர்களுடன் இணைந்து ஆட்சியமைக்குமாறு மக்கள் கோரவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ☞ 2

## இலங்கையின் பணவீக்கம் மேலும் உயர்வு

உலகிலேயே அதிக பணவீக்கமுள்ள நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தை இலங்கை பெற்றுள்ளது என்று அமெரிக்காவின் ஜோன் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் தொடர்பான பேராசிரியர் ஸ்டீவ் ஹென்கி தெரிவித்துள்ளார்.

அவர் இதற்கு முன்னர் ☞ 2

## தனது 22ஆவது பிறந்தநாளில் விபத்தில் பலியான இளைஞர்

தனது பிறந்தநாளில் மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞரும் மற்றுமொரு இளைஞரும் நேற்று மோட்டார் சைக்கிளில் சென்றபோது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

அதில் பயணித்த யாழ்., மாவிட்டபுரம் பகுதியைச் சேர்ந்த குணசேகரன் நிக்சன் (வயது 22) எனும் இளைஞர் உயிரிழந்துள்ளார். அவருடன் பயணித்த ரவிகரன் கனிஸ்டன் (வயது 20) எனும் இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞரின் 22ஆவது பிறந்தநாள் ☞ 2

## 'விடுதலைக்கான போராட்டம்' ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி கொழும்பை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கண்டியில் இருந்து புறப்பட்ட நடைபவனி மாவனல்ல, கலிகமுவ, தங்கோவிட்ட, யக்கல, பேலியகொடை வழியாக கொழும்பு சுதந்திர சதுக்கத்தை வந்தடையும்.

## விக்கியும் முழு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் அவர் குறிப்பிட்டார்.

## தந்தை செல்வா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறங்காவற்குழு தலைவருமான கலாநிதி சு.ஜெபநேசனின் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நினைவுத் தூவிக்கு மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செய்யப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## 'மொட்டு'டன் இணைந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் பழிவாங்கலால் பாதிக்கப்பட்டோர்களின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இம் மாநாட்டில் அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:-

காலிமுகத்திடல் மாத்திரமன்றி நாட்டின் எந்த இடத்திலும் இந்த அடாவடித்தனமான அரசை முதலில் வீட்டுக்கு அனுப்புமாறே மக்கள் கோருகின்றனர். அதற்காக ஐக்கிய மக்கள் சக்தி அர்ப்பணிப்புடன் செயற்படும்.

மக்களின் குரல் மற்றும் மக்களின் கோரிக்கைகளுக்கு அப்பால் நாம் எதனையும் செய்யப்போவதில்லை.

தற்போதைய ஜனாதிபதியையோ அல்லது ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த யாருடனும் இணைந்து ஆட்சியமைக்குமாறு மக்கள் கோரவில்லை.

மொட்டுடன் ஆட்சி அமைத்துக் கொள்ளையர்களைப் பிடிக்க முடியாது. அவர்களுடன் இணைந்து ஆட்சியமைக்குமாறு மக்கள் கோரவில்லை.

அன்று நாம் நாட்டை ஒப்படைக்கும் போது, 7 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் கையிருப்பு இருந்தது. இன்று அரசு உலகம் பூராகவும் பிச்சை எடுக்கின்றது - என்றார்.

## இலங்கையின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த பெப்ரவரியில் வெளியிட்ட பணவீக்கப் பட்டியலில், இலங்கை ஆறாவது இடத்தில் இருந்தது.

பேராசிரியர் ஸ்டீவ் ஹென்றியின் அறிக்கையின்படி இலங்கையில் பணவீக்கம் 17.5 வீதத்திலிருந்து 119 வீதமாக அதிகரித்துள்ளது.

அந்த அறிக்கையின்படி இலங்கை சிம்பாப்வேக்கும் லெபனானுக்கும் அடுத்த படியாக இருக்கின்றது.

சிம்பாப்வேயின் பணவீக்கம் 207 வீதமாகும் , லெபனானின் பணவீக்கம் 150 வீதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தனது 22ஆவது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய தினமாகும். அந்நாளில் இருவரும் மோட்டார் சைக்கிளில் அராலி - வல்லை வீதியில் பயணித்தவேளை , தெல்லிப்பழை அம்பனைச் சந்திக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக இருந்த வேலித் தூணுடன் மோதி விபத்துக்குள்ளானது.

சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விமல் வீரவன்ஸவை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் எம்.பி. ஒருவர் தெரிவித்துள்ளார் என்று இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது.

குறித்த எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியடைந்து சர்வகட்சி இடைக்கால அரசு அமைந்தால் அதில் பிரதமர் பதவிக்கு முன்னாள் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸவின் பெயரைப் பரிந்துரைக்க அரசிலிருந்து வெளியேறிய சுயாதீன எம்.பிக்கள் குழு தீர்மானித்துள்ளது என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சுயாதீன எம்.பிக்கள் குழுவில் ஒரு பிரிவினர் விமலைப் பிரதமராக்க அனைத்து வழிகளிலும் முயன்று வருகின்றனர். எனினும், இது எந்தளவுக்குச் சாத்தியப்படும் என்று எமக்குத் தெரியவில்லை.

ஆனால், அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை முதலில் வெற்றி பெற வேண்டும் என்பதில் எதிர்க்கட்சியினரும் சுயாதீன எம்.பிக்கள் குழுவினரும் ஓரணியில் உறுதியாக நிற்கின்றனர் - என்று கூறியுள்ளார்.

## மின்சாரக் கட்டணமும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்சாரசபை விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் வகையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்துவதற்குப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தயாராகவுள்ளது என அறியமுடிகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

ENGLISH CLASSES

யாழ் நகரில் தனி வகுப்புகள் A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்

G.G.E. O/L - English Literature

Grade 10 & 11 தனி வகுப்புகள்

Language தரமும்

திருத்தப்படும்.



K.Ganesh B.A . 077 7668725



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பயனற்ற அரசியல்வாதிகள்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியபடி கொழும்பு அரசியல் தினசரி ஒரு திருப்பம் எடுத்துக் கொண்டுதான் இருக்கின்றது.

தற்போதைய அரசுக்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கப் போவதாக உதய கம்மன்பில – விமல் வீரவன்ஸ அணி அறிவித்ததை அடுத்து நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரமும் சூடு பிடிக்கும் போலத் தென்பட்டது.

ஆனால் நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற்றதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை யாது என்பது திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தப் படாவிட்டால் அந்தப் பிரேரணையை நாம் கண்மூடித்தனமாக ஆதரிக்க மாட்டோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அறிவித்தமையை அடுத்து நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரம் கொஞ்சம் பின்தள்ளப்பட்டு விட்டது.

இன்றைய நிலையில் மக்களின் விருப்பமும் சீற்றமும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகத்தான் உள்ளது. அவர் வீட்டுக்குப் போக வேண்டும் என்பதுதான் மக்களின் ஏகோபித்த கோரிக்கையாக இருக்கின்றது.

ஆனால் நமது அரசியல்வாதிகள் அந்தத் திசையில் நகர்வதை விடுத்து தங்களின் அரசியல் எதிர்காலத்துக்கான நகர்வுகள் குறித்து – அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை, இடைக்கால அரசு, மாற்று அரசு என்றெல் லாம் – கயிறு விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

மக்களின் எதிர்பார்ப்புப்படி ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பும் கைங்கரியத்தை இந்த நாடாளுமன்ற அரசியல்வாதிகளால் செய்ய முடியாவிட்டால், குறைந்தபட்சம் அவரது அதிகாரத்தை வெட்டிக் குறைப்பதற்கான வழிவகைகளையாவது அவர்கள் செய்ய வேண்டும்.

இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முயற்சி, ஜனாதிபதியினால் தந்திரோபாயமாக புறந்தள்ளப்பட்டு விட்டது. ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டிக் குறைப்பது தொடர்பான பிரதமரின் கோரிக்கையை ஏற்கின்ற மாதிரி ஏற்று, காலத்தை இழுத்தடித்து நீர்த்துப்போகச் செய்யும் தனது உத்தியைச் சாணக்கியமாகக் கட்டவிழ்த்து, காய் நகர்த்தி, அந்தத் திட்டத்தைச் செயலிழக்க வைப்பதில் ஜனாதிபதி வெற்றி கண்டிருக்கிறார் என்றே கூறவேண்டும்.

பிரதமரின் முயற்சி தோற்றுள்ள பின்னணியில், எதிர்க்கட்சிகள்தாம் இந்தப் பணியைப் பொறுப்பேற்க வேண்டும்.

20 ஆம் திருத்தம் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பிடுங்கி 19ஆவது திருத்த ஏற்பாடுகளைத் திரும்ப நடைமுறைக்குக் கொண்டு வரச் செய்யும் வகையில் 21ஆவது திருத்த யோசனை ஒன்றை இப்போது சுயாதீன அணி உறுப்பினராக நாடாளுமன்றத்தில் இயங்கும் விஜயதாஸ ராஜபக்ஷ முன்மொழிந்து இருக்கின்றார்.

அதேநேரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முழுமையாக ஒழிப்பதற்கான பிரேரணை ஒன்றை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் அதன் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தனிநபர் பிரேரணையாக ஒப்படைத்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சி அதிகாரத்திலிருந்து கிளப்பி, வீட்டுக்கு அனுப்ப முடியாவிட்டால் அடுத்து செய்ய வேண்டியது இப்படி அவரது அதிகாரத்தை வெட்டுவதற்கான சட்டங்களை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வருவதுதான். ஆனால் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அது குறித்துச் சிந்திப்பவர்களாகத் தெரியவில்லை. எப்படியும் தங்களின் பதவி நிலைகளை, அந்தஸ்து – அதிகாரத்தை, தக்க வைத்துக் கொள்வதில் மட்டுமே குறியாக இருக்கின்றார் கள் அவர்கள். இத்தகைய அரசியல்வாதிகளினால் நமது நாட்டுக்கு பெரும் பாதிப்பே தவிர வேறில்லை.

# இலங்கையில் வாழ்ந்தால் பட்டினியால் இறந்து விடுவோம்!

## தமிழகம் சென்றுள்ள மக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மற்றும் காக்கைதீவு பிரதேசங்களை சேர்ந்த 5 குடும்பங்களை சேர்ந்த 9 மாத குழந்தை உள்ளிட்ட 15 பேர் திங்கட்கிழமை தனுஷ்கோடியை அண்மித்த கோதண்டராமர் கோவில் கடற்கரை பகுதியை சென்றடைந்துள்ளனர்.

அது தொடர்பில் தகவல் அறிந்த ராமேஸ்வரம் கடலோரபாதுகாப்பு பொலிஸார் இவர்களை மீட்டு மண்டபம் கடலோர பாதுகாப்பு பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் போது, தாம் நெடுந்தீவு கடற்கரையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை படகில் ஏறியதாகவும் , நேற்று அதிகாலை 3 மணியளவில் அப்பகுதியில் இறக்கி விடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை , இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகத் தற்போது அத்தியாவசியப் பொருள்களான அரிசி, பருப்பு, கோதுமை, விலை கடுமையாகஉயர்ந்துள்ளது.

ஒரு கிலோ பச்சை மிளகாய் ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்வதால், எப்படி வாங்கி சாப்பிட முடியும்? மருத்துவப் பொருள்களுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரசு வைத்திய சாலையில் போதிய மருந்துகள் இல்லை. தனியார் வைத்தியசாலைகளுக்கு சென்றால் காய்ச்சல் தலைவலிக்கு 4 ஆயிரம் ரூபா வரை வசூல் செய்கிறார்கள்.

இதே நிலை நீடித்தால் இலங்கையில் பட்னி சாவு ஏற்பட்டு, அனைவரும் உயிரிழக்க நேரிடும். எனவே உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் இன்று வரை 75 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் பக்கம் நின்றே அரசுக்கு எதிராக வாக்களிக்க தீர்மானம்!

## ராமேஷ்வரன் தெரிவிப்பு

மக்கள் பக்கம் நின்றே, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கும் முடிவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எடுத்துள்ளது என்று இ.தொ.காவின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

அரசுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் இ.தொ.காவின் நிலைப்பாடு தொடர்பில் ஊடகவியலாளர் தொலைபேசி வாயிலாக கேட்ட போது, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படும் என அறிவிப்பு விடுத்தவர்களுக்கு கூட, அது வெற்றிபெறுமா என்ற சந்தேகம் இருந்தது. அதுமட்டுமல்ல உள்ளடக்கங்கள் பற்றி எம்முடன் பேச்சு நடத்தப்படவில்லை. அதனால் தான் நடுநிலை என்ற அறிவிப்பு விடுக்கப்பட்டது.

தற்போது பிரேரணை பற்றி எமக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அது வெற்றியளிக்கக்கூடிய சாத்தியமும் காணப்படுகின்றது. பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்பதுதான் மக்களின் கருத்து.

மக்களின் தீர்ப்பே, எமது அரசியல் நடவடிக்கை. அந்த கொள்கையின் அடிப்படையில் செயற்படும் கட்சியே இ.தொ.கா. அன்று முதல் இன்று வரை நாம் தடம்மாறி பயணித்தமை கிடையாது. அந்தவகையில் மக்கள் முடிவை ஏற்று, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களிப்போம்.' –என்றார்.

# எரிவாயுவுடன் கூடிய கப்பல் இன்று இலங்கை வந்தடைவு!

3 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் எரிவாயுவுடன்கூடியகப்பல்இன்றுஇலங்கையை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று காலை 8.30 மணியளவில் இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைச்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் நாளை முதல் எரிவாயு விநியோகம் முன்னெடுக்கப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. அத்துடன் 3 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் எரிவாயுவுடன் கூடிய மற்றுமொரு கப்பல் எதிர்வரும் 28 ஆம் திகதி இலங்கையை வந்தடையவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி விரைவில்!

இம்முறை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், மே மாதம் முதல் வாரத்தில் வெட்டுப்புள்ளிகளை வெளியிடக்கூடியதாக இருக்கும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக பாடசாலை விவகாரங்களுக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் லலிதா எகொடவெல கூறியுள்ளார்.

பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இம்முறை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை ஜனவரி மாதம் 22 ஆம் திகதி நடத்தப்பட்டு, மார்ச் மாதம் 13 ஆம் திகதி அதன் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. புலமைப்பரிசில் பரீட்சைக்கு 340,508 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். இந்தப் பரீட்சை 2,943 பரீட்சை நிலையங்களிலும் 108 விசேட பரீட்சை நிலையங்களிலும் இடம்பெற்றது.

# இலங்கைக்கு ஒரு கோடியே 25 லட்சம் ரூபாவை இத்தாலி அவசர உதவியாக வழங்குகின்றது!

இலங்கைக்கு அவசர உதவியாக ஒரு கோடியே 25 லட்சம் ரூபாவை வழங்க இத்தாலி அரசாங்கம் முன்வந்துள்ளது.

இலங்கைக்கான இத்தாலிய தூதரகம் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நிதி மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு வழங்கப்படவுள்ளது.

# உக்ரைனின் மரியுபோல் நகரில் குண்டு சத்தங்களுக்கு மத்தியில் வழக்கம்போல் இயங்கும் உயிரியல் பூங்கா!

## உணவு, உதவிகளை செய்துகொடுக்கும் ரஷ்யா



உக்ரைனின் மரியுபோல் நகரில் குண்டு சத்தங்களுக்கு மத்தியில் தனியார் உயிரியல் பூங்கா வழக்கம் போல இயங்கி கொண்டிருக்கிறது. போரால் மனிதர்கள் மட்டுமின்றி அரியவகை விலங்குகளும் உயிரிழந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உக்ரைன் மீது படையெடுத்துள்ள ரஷ்யா, மற்ற பகுதிகளை காட்டிலும் துறைமுக நகரான மரியுபோல் மீதே அதிக கவனத்தை வைத்துள்ளது. ரஷ்ய படைகள் வீசிய ஏவுகணைகளால் மரியுபோல் நகரமே சாம்பல் மேடாகியுள்ளது.

அங்கிருந்து பெரும்பாலான மக்கள் வெளியேறிவிட்ட போதும் வசுரா என்பவர்தான், தான் நடத்திவரும் உயிரியல் பூங்காவை பராமரிப்பதற்காக அங்கேயே தங்கிவிட்டார்.

சிறுத்தை, குரங்குகள், நெருப்பு கோழிகள், ஒட்டகங்கள் என சிறிய அளவில் இவர் நடத்தி வரும் மிருக காட்சி சாலை, போருக்கு மத்தியிலும் வழக்கம் போல் செயல்பட்டு வருகிறது.

கடும் போருக்கு மத்தியிலும் உயிரியல் பூங்கா ஊழியர்கள் மிகுந்த சிரமத்தோடு விலங்குகளுக்கு தினந்தோறும் உணவளித்து வருகின்றனர். சில தினங்களுக்கு முன்பு மிருக காட்சி சாலைக்கு அருகே நடந்த குண்டுவீச்சில் ஒட்டகங்கள், நெருப்பு கோழிகள், மாடுகள், குரங்குகள், சிறுத்தை ஆகியவை உயிரிழந்து விட்டன.

இது அவர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. தற்போது மரியுபோல் நகரம் முழுமையாக ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதால், இந்த உயிரியல் பூங்காவுக்கான உணவை ரஷ்யாவே வழங்கி வருகிறது. மாஸ்க் உயிரியல் பூங்காவில் இருந்து உணவுகள், உதவிகள் அளிக்கப்படுகின்றன. இதனால் உயிரியல் பூங்கா ஊழியர்கள் சற்றே நிம்மதி அடைந்துள்ளனர். இவ்வளவு சோகத்திற்கு மத்தியிலும் புதிதாக ரங்கூன் குட்டிகள் பிறந்திருப்பதும் அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# உக்ரைனுக்கு எதிரான போர் 3ம் உலக போருக்கான உண்மையான ஆபத்து : ரஷ்யா பகீர் எச்சரிக்கை



உக்ரைனுக்கு எதிரான போர் 3ம் உலக போருக்கான உண்மையான ஆபத்து என்று ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்து வரும் போர் 2 மாதத்தை கடந்து தொடர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் ரஷ்ய படைகள், ஒரே இரவில் 423 இடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தினர். உக்ரைனின் 26 ராணுவ இலக்குகளை அழித்துள்ளது. இந்த தாக்குதல் நேற்றும் தொடர்ந்தது. குறிப்பாக, கிழக்கு உக்ரைனில் உள்ள ரயில் மற்றும் எரிபொருள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை முற்றிலும் அழிக்கும் வகையில் தாக்குதல் நடத்தியது.

இந்த நிலையில், ரஷ்யாவின் அதிகாரப்பூர்வ தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்துள்ள வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், உக்ரைன் உடனே பேச்சுவார்தைகள் தொடரும் என்றும் கூறியுள்ளார். ஆனால் உக்ரைன் அரசின் ராணுவ நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள லாவ்ரோவ், உக்ரைன் எல்லை மீறினால் அது பேச்சுவார்த்தைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்று கூறினார். நல்ல எண்ணத்திற்கும் வரம்புகள் உள்ளதாக கூறிய ரஷ்ய வெளியுறவு அமைச்சர், அது பரஸ்பரமாக இல்லாவிட்டால் பேச்சுவார்த்தை நடைபெறுவதில் பலன் ஏதும் இருக்காது என்று கூறினார்.

அமைதி வழியில் செல்லவே ரஷ்யா விரும்புவதாக குறிப்பிட்டுள்ள லாவ்ரோவ், உக்ரைனுக்கு மேற்கு உலக நாடுகள் உதவிகள் நீடித்தால் 3ம் உலக போரின் உண்மையான ஆபத்து தற்போதும் இருப்பதாக எச்சரித்துள்ளார்.



# பிரான்ஸ் அதிபர் தேர்தல் வென்றார் மேக்ரான்

பிரான்ஸ் நாட்டின் அதிபரின் முதல் கட்ட தேர்தலில் எந்த வேட்பாளரும் 50 சதவீத வாக்குகளை பெறவில்லை. இதனால், முதல் 2 இடங்களை பிடித்த வேட்பாளர்களுக்கு இடையேயான 2வது சுற்று வாக்குப்பதிவு நேற்று முன்தினம் நடந்தது. இதில், தற்போதைய அதிபர் மேக்ரான், மரைன் லு பென் போட்டியிட்டனர். மேக்ரான் 58.8% வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். முதல் சுற்றில் மேக்ரான், லு பென்னை விட 16 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் 4.5 புள்ளிகள் பெற்று முன்னிலையில் இருந்தார். மெலன்சோன் 22% வாக்குகள் மட்டுமே பெற்றிருந்தார். எனவே, 2வது சுற்றில் போட்டியிடும் வாய்ப்பை இழந்தார். இந்த வெற்றியின் மூலம், 20 ஆண்டுகளுக்கு பிறகு 2வது முறை அதிபராகும் பெருமையை மேக்ரான் பெற்றுள்ளார். இவருக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்து உள்ளார்.

# ரூ. 3 லட்சத்து 30 ஆயிரம் கோடியில் டுவிட்டரை வாங்கும் எலான் மஸ்க்



பிரபல சமூக வலைதளமான டிவிட்டரை ரூ.3.3 லட்சம் கோடி கொடுத்து எலான் மஸ்க் வாங்க உள்ளார். இதற்கான பேச்சுவார்த்தை முடிந்துள்ள நிலையில் விரைவில் அறிவிப்பு வெளியாக உள்ளது. டெஸ்லாவின் முதன்மை செயல் அதிகாரி மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனரான எலான் மஸ்க் பிரபல சமூக வலைதளமான டிவிட்டரில் கருத்து சுதந்திரம் இல்லை என சமீபத்தில் குற்றம்சாட்டினார். அதைத் தொடர்ந்து டிவிட்டரில் 9.1 சதவீத பங்குகளை வாங்கிய மஸ்க், அதன் நிர்வாக குழுவில் இடம் பெறும் வாய்ப்பை பெற்றார். அதே சமயம், மொத்தமாக விலை கொடுத்து டிவிட்டரை வாங்கப் போவதாகவும் கடந்த சில நாட்களாக கூறி வந்தார். கடந்த 14ம் தேதி டிவிட்டர் நிர்வாகத்துடன் நடத்திய பேச்சில் ரூ.3.3 லட்சம் கோடி தந்து நிறுவனத்தை வாங்க விருப்பம் தெரிவித்தார்.

இந்த பரபரப்பான சூழலில், மஸ்க் கூறிய தொகைக்கு நிறுவனத்தை விற்க டிவிட்டர் நிர்வாகம் சம்மதித்திருப்பதாக நேற்று தகவல்கள் வெளியாகின. பேச்சின்போது, ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டால் காலக்கெடு, தொகை உள்ளிட்ட விவரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றன. டிவிட்டரை வாங்கும் எலான் நடவடிக்கைகள் மிக வேகமாக நடந்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. எனவே, டிவிட்டர் நிறுவன உரிமையாளராக மஸ்க் விரைவில் அறிவிக்கப்படவாய்ப்பிருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. எலான் மஸ்க் டிவிட்டர் நிறுவனத்தை வாங்கும் பட்சத்தில் அதில் பல்வேறு அதிரடி மாற்றங்கள் செய்யப்படும் எனவும் எதிர்பார்ப்புகள் எழுந்துள்ளன.



# உலகின் மிக வயதான மூதாட்டி மரணம்

உலகின் மிக வயதான பெண்மணி என்ற கின்னஸ் புத்தகத்தில் சாதனை ஏற்படுத்திய 119 வயது மூதாட்டி கேன் டனகா காலமானார். ஜப்பானை சேர்ந்த கேன் டனகா 1903ம் ஆண்டு ஜனவரி 2ம் தேதி பிறந்தார். இவர் தனது பெற்றோருக்கு 8 குழந்தைகளில் 7வது மகளாக பிறந்தார். இவருக்கு ஹிட்யு டனகா என்பவருடன் 1922ம் ஆண்டு திருமணமாகி நான்கு குழந்தைகள் பிறந்தன. கடந்த 2019ம் ஆண்டு இவர் தனது 116 வயதில் உலகின் மிக வயதான பெண்மணி என்ற சாதனையை படைத்து, கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தார். அதன் பிறகு 2020ம் ஆண்டிலும் மீண்டும் இதே சாதனை படைத்தார். இந்நிலையில் கேன் டனகா கடந்த 19ம் தேதி மரணமடைந்ததாக ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது. ஜப்பானில்தான் அதிக வயது வரை வாழ்வோர் அதிகம் உள்ளனர். அதே போல் முதியோர் இல்லங்களும் அதிகளவு இருக்கின்றன.



# ஜப்பானில் பல் மருத்துவர்களின் பயிற்சிக்காக உருவாக்கப்பட்ட குழந்தை ரோபோ

ஜப்பானில் பல்மருத்துவர்கள் பயிற்சி பெறுவதற்காக பிரத்யோக ரோபோ ஒன்றை உருவாக்கியுள்ளனர். கண்களை உருட்டி கொண்டு குழந்தை போலவே அழுகும் இந்த ரோபோவிற்கு பிடியாராய்டு என்று பெயரிட்டனர்.

குழந்தைகளுக்கு பல் சிகிச்சை அளிக்கும் போது அவர்களிடம் ஏற்படும் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் இந்த ரோபோவை வடிவமைத்துள்ளனர். குறிப்பாக சிகிச்சையின் போது வலிப்பு மற்றும் இதய செயலிழப்பு ஆபத்து குறித்தும் இந்த ரோபோ கண்டறிந்து வெளிப்படுத்தும் என்று கூறப்படுகிறது. இதன் மூலம் நெருக்கடியான சூழலில் குழந்தைகளை எவ்வாறு கையாளுவது என்று பயிற்சி பெரும் மருத்துவர்கள் எளிதில் அறிந்து கொள்ளலாம் என ரோபோவை உருவாக்கிய நிறுவனம் கூறியுள்ளது.



# மோடியின் காஷ்மீர் பயணத்துக்கு பாகிஸ்தான் எதிர்ப்பு அறிக்கை

பிரதமர் மோடி காஷ்மீரில் 20 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்து, கிஸ்த்வார் மாவட்டத்தில் செனாப் நதியில் 5,300 கோடியில் அமைக்கப்பட உள்ள 850 மெகாவாட் நீர்மின் திட்டம், 4,500 கோடி மதிப்பிலான குவார் நீர்மின் திட்டம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டினார்.

ஜம்மு – காஷ்மீருக்கு சிறப்பு மாநில அந்தஸ்து ரத்துச் செய்யப்பட்ட பின்னர் அங்கு மோடி முதல் முறையாக சென்றிருந்தமை முக்கியத்துவம் பெற்றிருந்த நிலையில், இந்தியப் பிரதமரின் காஷ்மீர் பயணத்துக்கு அண்டை நாடான பாகிஸ்தான் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவு அலுவலர் வெளியிட்ட அறிக்கையில், மோடியின் காஷ்மீர் பயணம், அங்கு போலி இயல்பு நிலையை முன்னிறுத்துவதற்கான மற்றொரு தந்திரம். 2019 ஒகஸ்ட் 5 ஆம் திகதி முதல், காஷ்மீரில் உள்ள உண்மையான அடிப்படைப் பிரச்சினைகளில் இருந்து கவனத்தை திசை திருப்ப இந்தியா மேற்கொண்ட பல அவநம்பிக்கையான முயற்சிகளை சர்வதேச சமூகம் கண்டுள்ளது.

இந்தியா வடிவமைத்துள்ள நாட்டில் நீர்மின் நிலையக் கட்டுமானம் சர்ச்சைக்குரியது. மேலும், குவார் நீர்மின் நிலையத்துக்கு இந்தியா இதுவரை பாகிஸ்தானுடன் தகவல்களை பகிர்ந்து கொள்ளும் ஒப்பந்த விதியை நிறைவேற்றவுமில்லை.

இந்தியப் பிரதமரால் இரண்டு நீர்மின் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டதை, 1960 ஆம் ஆண்டின் சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் நேரடி மீறலாக பாகிஸ்தான் கருதுகிறது.

சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா தனது கடமைகளை நிறைவேற்ற வேண்டும். ஒப்பந்தக் கட்டமைப்புக்கு தீங்கு விளைவிக்கும் எந்த நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டாம் என்றும் பாகிஸ்தான் கேட்டுக்கொள்கிறது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின்சாரத் தட்டுப்பாட்டுக்கு மத்திய அரசின் மீது பழிபோடுவது சரியல்ல என்கிறார் ஜெயக்குமார்



தமிழகத்தில் செயற்கையான மின்சாரத் தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிட்டு, மத்திய அரசின் மீது பழி போடுவது சரியல்ல என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்திருக்கிறார்.

தேர்தல் வழக்குகளில் கைதாகி பிணையில் வெளியே வந்துள்ள முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், தமிழகத்தில் ஆளுநருக்குப் பாதுகாப்பு இல்லை. காவல் துறைக்கும் பாதுகாப்பு இல்லை. தூத்துக்குடி மாவட்டத்தில் போக்குவரத்து காவலரைத் தாக்கியுள்ளனர். ராயபுரத்தில் காவலரை இழிவான வார்த்தைகளால் பேசியுள்ளனர். இப்படி பரிதாபமான நிலைக்கு காவல் துறை ஆளாகியிருக்கிறது.

தவறு செய்வோரை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும். தி.மு.க. அரசின் தவறுகள் குறித்து அதன் தோழமைக் கட்சிகள் குரல் கொடுக்காமல் இருக்கின்றன. இதனை மக்கள் ஒரு போதும் விரும்ப மாட்டார்கள். தமிழகத்தில் செயற்கையான மின்சாரத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விட்டு, மத்திய அரசின் மீது பழி போடுவது சரியல்ல. 2113 கோடி ரூபாவுக்கு மின்சாரம் வாங்கப்பட்டுள்ளது. பொதுமக்களை இருட்டுக்குள் தள்ளி கஷ்டப்படுத்தும் இந்தப் பாவம் சும்மா விடாது, என்று ஜெயக்குமார் கூறியுள்ளார்.



## ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடத்திய இந்திய மாலுமிகள் ஏழு பேர் விடுவிப்பு

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டின் கொடி பொருத்திய சரக்கு கப்பலை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு கைப்பற்றியபோது, கப்பலில் இருந்த 7 இந்திய மாலுமிகள் உள்பட வெளிநாட்டினரை பணயக் கைதிகளாக பிடித்து வைத்துக்கொண்டனர்.

தொடர் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், 7 இந்திய மாலுமிகள் உள்பட 14 பேர் தற்போது விடுவிக்கப்பட்டனர். இதனை ஓமன் நாட்டு வெளியுறவு அமைச்சர் அல்புசைதி உறுதிப்படுத்தியுள்ளார். மீட்கப்பட்ட 14 பேர் மஸ்கட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக அவர் தெரிவித்தார். இதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் நன்றி தெரிவித்துள்ளார்.

## சட்டப்பிரிவு 370 ரத்தானதை எதிர்த்து உச்ச நீதிமன்றில் வழக்கு கோடை விடுமுறைக்குப் பின்னர் விசாரணை நடைபெறும்



ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 370 ஐ இந்திய மத்திய அரசு ரத்துச் செய்து, இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரித்தது. மத்திய அரசின் இந்த முடிவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள் 2019 ஆம் ஆண்டு அப்போதைய தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாயாவினால், நீதிபதி என்.வி.ரமணா தலைமையிலான அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றப்பட்டன.

இந்த மனுக்களை கோடை விடுமுறைக்குப் பிறகு விசாரணைக்குப் பட்டியலிடுவது குறித்து பரிசீலிக்க உச்சநீதிமன்றம் தற்போது ஒப்புக் கொண்டுள்ளது.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா மற்றும் நீதிபதி ஹிமா கோலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு, மனுதாரர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர் சேகர் நபாடே ஆஜராகியிருந்தார். மாநிலத்தில் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்டதற்கு எதிரான மனுக்களை அவசரமாக விசாரிக்க வேண்டும் என்று அவர் வாதாடினர். அது தொடர்பான மனுவையும் அவர் தாக்கல் செய்தார். ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வு விசாரிக்க வேண்டிய விவகாரம் இது. எனவே, நான் அந்த அமர்வை மீண்டும் அமைக்க வேண்டும், என்று தலைமை நீதிபதி என்.வி.ரமணா தெரிவித்திருக்கிறார்.



# துணைவேந்தர்களை மாநில அரசு நியமனம் செய்யும் சட்ட மசோதா தமிழக சட்டசபையில் நிறைவேறியது

தமிழக சட்டசபையில் நேற்று உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கான ஒரு சட்ட முன்வடிவை தாக்கல் செய்தார். 1949 ஆம் ஆண்டு குஜராத் பல்கலைக்கழக சட்டம் மற்றும் 1991 ஆம் ஆண்டு தெலுங்கானா பல்கலைக் கழகங்கள் சட்டங்களில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை நியமிக்க, தொடர்புடைய மாநில அரசுகளுக்கு அதிகாரம் உள்ளது. துணைவேந்தரான வர் 2000 ஆம் ஆண்டு கர்நாடக மாநில பல்கலைக் கழக சட்டத்தின்படி மாநில அரசின் இசைவுடன் வேந் தரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

இந்தப் பிற மாநில பல்கலைக்கழக சட்டங்களுக்கு ஏற்ப தமிழ்நாட்டு மாநில அரசானது, பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை நியமிப்பதற்கான அதிகாரம் மாநில அரசுக்கு வேண்டும் என கருதுகிறது. அந்த நோக்கத்துக்காக மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட 13 பல் கலைக் கழகங்களுக்கான சட்டங்களைத் திருத்த முடிவு செய்துள்ளது, என்று அந்த சட்ட முன்வடிவு பற்றி அமைச்சர் பொன்முடி விளக்கமளித்தார்.

இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டதும் ஆரம்ப நிலையிலேயே அதனை எதிர்ப்பதாக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் தெரிவித்தார். பா.ஜனதா எம்.எல்.ஏ. நயினார் நாகேந்திரன், ஆரம்ப நிலையிலேயே இந்த சட்ட மசோதாவை எதிர்த்து வெளிநடப்புச் செய்கிறோம், என்று தெரிவித்து பா.ஜனதா உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

இந்தச் சட்டமசோதாவை நேற்றே ஆய்வுக்கு எடுத்து கொள்ள வேண்டும் என்று அமைச்சர் பொன்முடி கேட்டுக் கொண்டார். அதைத் தொடர்ந்து ஏனைய கட்சி உறுப்பினர்களும் மசோதா மீது கருத்துத் தெரிவித்தனர். முதலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது கருத்துகளைப் பதிவு செய்தார். அதன்பின் ஒவ்வொரு கட்சி உறுப்பினர்களும் மசோதா பற்றிய தமது உரைகளை நிகழ்த்தினர். இறுதியாக அமைச்சர் பொன்முடி மசோதா மீதான விவாதங்களுக்கு விளக்கம் அளித்து பேசினார். இதைத் தொடர்ந்து சட்ட மசோதா நிறைவேறியது.

தமிழகப் பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை இதுவரை ஆளுநரே நியமித்து வரும் நிலையில், அந்த அதிகாரத்தை அரசுக்கு மாற்றும் சட்ட மசோதாவை நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கே அரசு அனுப்பி வைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு







# சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பாக மட்டுநகரில் செயலமர்வு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கையில் நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புதல் தொடர்பான செயலம ர்வொன்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் நிறுவன இயக்குனர் அருட்பணி ஏ.ஜேசுதாசன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற ஒரு நாள் செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல் சமய உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர் கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கையில் இனங்களுக்கிடையில் நல் லிணக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் பல நல்லிணக்க சமூக செயல்பாடுகளை இந்நிறு வனம் முன்னெடுத்து வருகின்ற நிலையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் இலங்கையில் நிலையான சமாதா னத்தை கட்டியெழுப்புதல், அந்த சமாதா னத்தை அடைவதற்கான சவால்கள், நிலையான சம ாதானத்திற்கானமுன்மொழிவுகள், இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான புரிந்து ணர்வுகளை எவ்வாறு புரிந்து கொள்ள வைத்தல் ஆகியன தொடர்பாகத் தெளிவுபடுத்தும் ஒருநாள் செயலமர்வே இவ்வாறு முன்னெடுக்கப்பட்டது.

இந்த செயலமர்விற்கு வளவாளர்களாக கிழக்குப்பல்கலைக்கழகசிரேஷ்டவிரிவுரையாளர் அருட்பணி நவரெட்ணம் நவாஜீ அடிகளார், காத்தான்குடி பிஸ்மி கல்வி நிறுவன தவிசாளர் எம்.பி.எம். பிர்தொவஸ் நளினி ஆகியோர் கலந்துகொண்டு வளவாண்மையாற்றியிருந் தனர்.

செயலமர்வில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.





# 'நஞ்சு மனிதர்' நூல் மட்டுநகரிக்வெளியீடு!

(க.கிருபாகரன்)

பட்டிப்பளைப் பிரதேச கலை, இலக்கிய சமூக அபி விருத்தி ஒன்றியமும், அடிப்புற அரங்கச்செயற்பாட்டு பேரவை யும் இணைந்து நடத்திய – சு.சந்திரகுமார் எழுதிய – 'நஞ்சு மனிதர்' நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் மட்டக் களப்புபொதுநூலகக்கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கவிஞர் த.மேகராசா தலை மையில் நடைபெற்ற மேற்படி வெளியீட்டு நிகழ்வில் பிரதம அதிதியாக பேராசிரியர் ஜீ. கென்னடியும், சிறப்பு அதிதி யாக பேராசிரியர் சி.மெளன குருவும் கலந்து கொண்டனர்.

நூலின் முதல் பிரதியை சி.வரதகரன் பெற்றுக் கொண் டார். நூலுக்கான வெளியீட் டுரையை கவிஞர் அழகு. தனுவும் மதிப்பீட்டுரையை ம ட்டக்களப்பு சுவாமி விபுலா னந்தா அழகியற் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரை யாளர் க.மோகனதாசனும் நிகழ்த்தினர்.

ஆரம்ப விவசாய செய்கை முறை பற்றியும், தற்கால விவசா யச் செய்கையில் நஞ்சுப் பாவனை காரணமாக எதிர்நோக்கப்படும் பிரச்சி னைகள் தொடர்பாகவும் பேசும் நாடகத்தினையும், ஆற்று கைகளின் போது பெறப்பட்ட அனுபவங்களையும் பேசு பொருளாகக் கொண்டு இந் நூல் பிரசவமாயிருப்பது குறிப் பிடத்தக்கது.

இவ்விழாவில் வைத்து நூலாசிரியர் பல்வேறு பிரமுகர் களால்பொன்னாடைபோர்த்தப் பட்டு, வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

# லொறி மோதி மரம் முறிந்தது போக்குவரத்தும் பாதிப்புற்றது

## தாளங்குடா சந்தியில் சம்பவம்

மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் தாளங்குடா சந்தியில் நேற்றுக் காலை பழமைவாய்ந்த மரம் மீது லொறி மோதியதில் அந்த மரம் முறிந்து நடுவீதியிலேயே விழுந்தது. அதனால் அந்த வீதியின் ஊடான போக்கு வரத்து இரு மணிநேரம் பாதி க்கப்பட்டிருந்தது.

காத்தான்குடி போக்கு வரத்துப் பொலிஸார் அந்த இடத்திற்கு விரைந்து மரத்தை அறுத்து வீதிப்போக்கு வரத்தைச் சீர் செய்தனர்.

மரம் விழுந்து மின்கம்பங் கள் விழுத்தியமையால் பிர தேசத்தில் மின் விநியோகமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வருடங்கள் பழைமை வாய்ந்த இம்மரம் பிரதேசத்தின் அடையாளமா கக் காணப்பட்டதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.



# பட்டிப்பளையில் இரத்த தானம்

பட்டிப்பளையில் இரத்தானம் வழங்கும் நிகழ்வு நேற்று திங்கட் கிழமை இடம்பெற்றது. முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு குருதியை கொடையாக வழங்கினர்.

இதனை மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகமும், பிரதேச இளைஞர் சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கியின் வைத்தியர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோர் இக்குருதியினைப் பெற்றுக்கொண்டனர்.





# மட்டுநகரில் வீதி புனரமைப்பு!

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாநகரசபையின் 2021ஆம் ஆண்டு பாதீட்டு ஒதுக்கீட்டின் கீழ் கல்லடி– வேலூர் கதிர்காம த்தம்பி வீதி தார் வீதியாகச் செப்பனிடும் பணிகள் மட்டக் களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவனின் மேற்பார்வையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. இப்பாதை, கல்லடி வேலூர் காளி கோவில் வீதியையும், புதிய கல்முனை பிரதான வீதி யையும் இணைக்கும் மார்க்கமாகும். இந்த வீதி மிக நீண்டகாலமாகச் செப்பனிடப்படாமல் இருந்தது. இந் நிலையில் அப்பிரதேசவாசிகளின் கோரிக்கைக்கமை வாக மட்டக்களப்பு மாநகர சபையின் பாதீட்டின் ஒதுக்கீட்டில் புனரமைப்பு மேற்கொள் ளப்படவுள்ளது.

இதன்போது கருத்துத் தெரிவித்த மட் டக்களப்பு ம ாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவண பவன் ம ட்டக்களப்பு மாநகரசபையில் தற்போது ஏற்பட் டுள்ள நிர்வாக மாற்றத்தினால் அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப வீதியில் இறங்குமாம் எதிர்க்கட்சி!

## மாபெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்கிறார் ஹரின்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அரசாங்கத்தையும் பதவியில் இருந்து அகற்றுவதற்கான வீதிப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

அந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, இலங்கை இதுவரை கண்டிராத மிகப்பெரிய எதிர்ப்பு பேரணி கண்டியில் இருந்து ஆரம்பமாகும் எனத் தெரிவித்தார்.

தலதா மாளிகையை வழிபட்ட பின்னர் போராட்டத்தை ஆரம்பித்து மே முதலாம் திகதி கொழும்பை சென்றடைவோம் என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் அதிகாரத்தில் இருந்து விரட்டியடிக்கும் முயற்சியை எஸ்.ஜே.பி ஆரம்பிக்கும் என்றும் கொழும்பில் தங்களின் போராட்டத்தை ஆரம்பிக்கும் இடத்தை பின்னர் அறிவிப்போம் என்றும் அவர் கூறினார்.

மேலும் 'நாங்கள் மார்ச் 15 அன்று நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு மாத கால அவகாசத்தை அரசாங்கத்துக்கு வழங்கினோம். அந்த ஒரு மாதம் இப்போது முடிவடைகிறது. எனவே இந்த அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கான போராட்டத்துக்கான நேரம் இது. மே 1, 2022 அன்று நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பதை அனைவரும் பார்க்க முடியும்.

ஒவ்வொரு போராட்டக்காரர்களும் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டாலும் எஸ்ஜே.பி. போராட்டத்தை தொடரும். மக்களுக்காக சிறை செல்ல நாங்கள் அஞ்சமாட்டோம்' என்று அவர் மேலும் கூறினார்.



# தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் இ.தொ.கா. கலந்துரையாடல்!

நாட்டில் ஏற்பட்டுள்ள பண வீக்கத்தின் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பின் அவசியம் தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமை காரியாலயமான சௌமிய பவனில் தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையப் பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள் ளது.

கலநதுரையாடலில் இ.தொ.கா.வின் தலைவர் செந்தில் தொண்டமான், பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

எதிர்காலத்தில் முன்னெ டுக்க வேண்டிய தொழிற்சங்க நடவடிக்கைகள் பற்றியும் இதன்போது ஆழமாக ஆராயப்பட் டுள்ளது

# நாணயக் கொள்கையை கடுமையாக்க கோரிக்கை

சர்வதேச நாணய நிதியம் இலங்கை நாணயக் கொள்கையை கடுமையாக்குமாறும் வரிகளை உயர்த்துமாறும் கோரியுள்ளது.

இலங்கை நெகிழ்வான மாற்று விகிதங்களை பின்பற்ற வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய–பசுபிக் செயற்பாட்டுப் பணிப்பாளர் ஆனி மேரி தெரிவித்துள்ளார். முக்கியமான செலவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வரி வருவாயை அதிகரிக்க வேண்டும் என்றும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பணவியல் கொள்கை கடுமையாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். கடந்த வார இறுதியில் இலங்கைப் பிரதிநிதிகளுடன் பயனுள்ள கலந்துரையாடல்களை மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# அத்தியாவசியப் பொருள்களின் விலை சிறிதளவு குறைய வாய்ப்பு

## அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியாளர்கள் சங்கம்

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் சிறிதளவு குறைய வாய்ப்புள்ளதாக அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் பொருள்களை இறக்குமதி செய்வது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறு எதிர்பார்ப்பதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இந்திய கடன் திட்டத்தின் கீழ் பொருள்களை இறக்குமதி செய்வதை ஆரம்பிக்க முடியும் என அதன் பேச்சாளரான நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

# மின் கட்டணத்தை அதிகரிக்க அனுமதி

மின் கட்டணத்தை அதிகரிக்குமாறு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. ஊடக நிகழ்வொன்றில் கலந்து கொண்ட மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும் அது சரியான முறையில் அமுல் படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் நாளாந்த இழப்பு சுமார் 50 கோடி ரூபாவாகும் எனத் தெரிவித்த அவர், இப்போது நாம் செய்ய வேண்டியது, உற்பத்தி செலவுக்கு ஏற்ற விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்துவதுதான் எனத் தெரிவித்துள்ளார். இதேவேளை, எரிபொருள் விலை திருத்தம் எதிர்காலத்தில் விலை சூத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# கடன் மதிப்பீட்டில் இருந்து மேலும் தரமிறக்கிய இலங்கை

உலகளாவிய தரமதிப்பீட்டு நிறுவனமான தரநிலை மற்றும் ஏழைகள் இலங்கையை கடன் மதிப்பீட்டில் இருந்து மேலும் தரமிறக்கியுள்ளது.

இலங்கையின் கடன் தரமதிப்பீடு சி.சி. அந்தஸ்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இயல்புநிலை ஆக தரமிறக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# அரிசிக்கு வரிசையில் நிற்கும் நிலைமை!

## மக்கள் கவலை






அரிசிக்கு வரிசையில் நிற்கும் நிலை ஏற்ட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தற்பொழுது அரிசிக்கும் வரிசையில் நிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர். தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சதோச விற்பனை நிலையத்தில் ஒரு கிலோ நாட்டரிசி 140 ரூபாவிற்கும், தீட்டல் அரிசி ஒரு கிலோ 110 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதனைப் பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு பகுதிகளிலுமிருந்து மக்கள் சென்று நீண்ட வரிசையில் காத்திருந்து அரிசியைப் பெற்று வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.04.2022இல் வெளியிடப்பெற்றது.